## புதுச்சேரி அரசு

## குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை
## புதுச்சேரி

***

## செய்தி குறிப்பு

1955 ஆம் ஆண்டு அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தில் இன்னப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள முகக் கவசம் (2 அடுக்கு, 3 அடுக்கு அறுவை சிகிச்சை முகக் கவசம் N95), கை சுத்திகரிப்பான் மற்றும் உணவு பாதுகாப்பு சட்டத்தில் அடங்கும் அனைத்து அத்தியாவசிய பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், மொத்த விற்பனை வணிகர்கள் / சில்லரை விற்பனை வணிகர்களுக்கு அறிவுறுத்துவது என்னவென்றால், மேற் குறிப்பிட்ட பொருட்களை பொதுமக்களுக்கு தடையின்றி வழங்குவதோடு குறைந்த பட்ச இருப்பு எப்போதும் வைத்திருக்க வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகபட்ச சில்லரை விலைக்குக் கூடுதலாக விற்பனை செய்யக்கூடாது மற்றும் மேற் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை பதுக்கி வைக்க கூடாது. இந்த விதிமுறைகளை எவரேனும் மீறினால் 1955 ஆம் ஆண்டு அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தப்படுகிறது. மேலும் குடிமைப்பொருள் வழங்கள் துறையின் கீழ் இயங்கும் காவல் கண்காணிப்பாளர், உணவு கடத்தல் தடுப்பு பிரிவு. மற்றும் தாசில்தார் தலைமையில் ஆய்வு மேற்கொள்ள உள்ளதால் பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், மொத்த விற்பனை வணிகர்கள் / சில்லரை விற்பனை வணிகர்கள் ஆகியோர் மேற்கூறிய அலுவர்களுக்கு தகுந்த ஒத்துழைப்பு தருமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இயக்குனர்